* SRI G. KRISHNAMOORTHY : Mr. Chairman, Sir, I welcome this Bill wholeheartedly. But I am afraid this Bill cannot tackle even the fringe of the problem. I used to wonder how a Government spending money in crores of rupees on the curative side of medicine had not been taking any action on the preventive side. I am glad this measure will go, to some extent, as a step on the preventive side. Wherever we go, from the small town to the big city, we find dirt, flies and what not, on all food-stuffs. We find even in the City of Madras, opposite big temples, in open places and open markets, jack fruits being sold with swarms of flies over them. We find jaggery and sugar being exposed in groceries with swarms of flies over them. We find rotten plantains exposed to flies, being bought and consumed by people. After all, what we are spending on the curative side will be much lessened if we take steps, rather if we had taken steps earlier, on the preventive side also. As the hon. Member Sri Balasubramanya Ayyar said, it is not a mere question of issuing licence. Anybody will get it. How are the Government going to enforce these provisions? Cannot the Government, just at least with reference to big hotels, appoint a committee of medical gentlemen who can go round, pay surprise visits and check these things? Cannot a complaint book system be introduced in hotels where visitors could make their remarks in the interest of public health? Even in big hotels, do we not find that dirt and flies are allowed to settle on sweets and other savouries and that they are exposed to flies? Flies may be smaller in number—but they are still harmful—as they are scared away by the electric fan rotating above. Therefore, cannot the Government, under the rule-making powers, just see that any eatable is covered with a metal mesh and cannot they also see that these fruits which are sold in the market, especially jack fruits, are covered by some plastic cloth or some such thing so that while they are covered, still they may be visible?

I have been all along suggesting to Government that the present system of supplying eatables in plates should be banned. We have provided in this Bill that a server, if he is affected by a communicable disease, should be driven out. What about the system obtaining now-? Wsa the system of taking tiffin in plates and sipping the cup with the lip prevalent in India? How horrible it is! We want plates. But the plates and cups are washed in one and the same bucket from morning till evening. That is considered more sacred than the Ganga water! In every cup, at least a drop of water from that bucket would be taken in along with the coffee. Cannot we have the system of paper cups which I have been just suggesting for the past many years? Cannot we have paper plates? Let them charge a little more. Let the plates and the cups be thrown away after use. Let them be charged for. So, we may just have these 3-50 p.m.

paper plates and paper cups or leaves. What about the plantain leaves? Why can't we just encourage the growth of plantain trees? Can we not substitute plates by leaves? Can we not have leaves and paper cups? In North India we find the earthen vessels being given. They are sipped and then thrown away. The fashion has come to stay that we must sip the cup. We cannot stop it. Even if we can stop it, the manager cannot see that every man does not do it. Why cannot we have the system of paper cups at least and then leaves or some paper plates? That will go a long way to stop the spread of this contagion. In fact, I am afraid many people are afraid—to enter hotels simply on account of the fact that we have to sip the cup which has been sipped by somebody just now and that it cannot be cleaned howsoever. And we have to take our chutney which may be tasty and which we may even take to the last atom there, by licking the plate which has been licked just recently by some other man who might have been having an infection.

Sri V. V. RAMASWAMI : தட்டுகளை ஒருவரும் நக்க முன்வர மாட்டார்கள்.

* Sri G. KRISHNAMOORTHY : I have been doing it. I can explain to the hon. Member Sri V. V. Ramaswami that I have the temptation to do it. If the chutney is nice, I do lick it. The sense of the palate is so strong that human weakness allows it. We find even in tea parties articles being served ten or fifteen minutes earlier itself. They are all placed readily there and nobody knows whether flies would have sat over them. How they are going to prevent all these things is a very big question. Of course, to a certain extent, it has to be left to the people themselves or to the schools where teachers can put in these ideas. But when we think of legislation, how are the Government going to enforce these things? I would, therefore, suggest to the Government to see that these broad things, namely, substitution of plates by leaves, tumblers—may be porcelain or eversilver vessels—by paper cups are enforced by legislation. That is a more important thing than the cleanliness or the good health of the server.

Sri T. PURUSHOTHAM : To start with, we can introduce this reform in our Legislature Canteen.

* Sri G. KRISHNAMOORTHY : In fact, I have seen these paper cups being used in many places even in North India. Even at tea parties they are used. They will not cost even two pies or three pies; old pies I mean.

So, let me conclude by requesting the Government to just see that at least after twelve years of Swaraj, foreigners are made to think that India is clean, as clean as it was in the days of Ram Rajya, and that people do not use some plate used by others. In fact, in our houses the plate used by the father will not be used by the son or the plate used by the son will not be used by the father.

16th February 1959] [Sri G. Krishnamoorthy]

The husband and wife may use the same plate. It is enjoined by the shastras. The wife should use the plate used by the husband. That is so in our household . . .

Sri V. V RAMASWAMI : கணவன் சாப்பிட்ட மீதத்தை மனைவி சாப்பிடும் பழங் கால வழக்கத்தைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார் போலும்.

Sri T. PURUSHOTHAM : It is the other way about in these days. (Laughter.)

* Sri G. KRISHNAMOORTHY : So, we have it. Even there, we are prohibiting the use of the plate of the father by the children and *vice versa*. May I just conclude by saying that we should bring in our old systems and make all people including foreigners think that we are more after cleanliness and that we will not take food on a plate on which food has already been taken by some others or use a cup which has been used by some others?

* **Sri V. V. RAMASWAMI** : கனம் மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள பொது சுகாதாரச் சட்டத்தைத் திருத்துவதற்காக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கக் கூடிய சட்டத்தின்படி, மக்கள் வந்து தங்கக்கூடிய விடுதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், சாப்பிடும் இடங்களைக் கட்டுப்படுத்த விதிகள் இல்லாததால், சில நிபந்தனைகளை வைப்பதற்காகவும் இந்தச் சட்டத்தில் அதிகாரம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி இருந்தால் தான், லைசென்ஸ் கொடுக்கப்படும் என்றும் அப்படி இல்லாவிட்டால் லைசென்சைக் கொடுக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது. லைசென்சு கொடுத்த பிறகு, அதன்படி நடக்காவிட்டால், அந்த லைசென்சு ரத்து செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் முக்கியமான விஷயம் என்னவென்றால், அதன் மூலம் தொத்து வியாதிகள் பரவாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகவும் இது கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. உணவுப் பொருள்கள் விற்கக்கூடிய இடங்களிலும் அவற்றைப் பரிமாறக்கூடிய இடங்களிலும் ஏற்பட்டிருக்கிற அசுத்தத்தின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவைத் தடுப்பதற்காகத் தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள சட்டத்தில் இப்படிப்பட்ட விதிகள் இல்லை. இது தான் சட்டத்தின் நோக்கம்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, இப்படி உணவுப் பண்டங்களை விற்கக்கூடியவர்கள் யார், யார், அவர்கள் எந்தெந்த இடங்களில் அவைகளை விற்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தெரியவரும். இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்களைக் கட்டுப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதன்படி யார் குற்றம் செய்வார்கள் என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். பெரிய பெரிய உணவுச் சாலைகளைக் கட்டுப்படுத்திவிடலாம், கட்டுப்படுத்தவும் முடியும். இந்தச் சட்டத்தைச் செயலில் கொண்டுவர வேண்டிய பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களைச் சார்ந்தது. அங்குள்ள சுகாதார அதிகாரிகளுக்குத்தான் பெரும்பாலான பொறுப்பு இருக்கிறது. அவர்களால்தான் இதைச் சரியானபடி அமுலுக்குக் கொண்டுவர முடியும். பெரிய விடுதிகளில்தான் இதை நல்ல முறையில் நிபந்தனைகளை விதித்துக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால், தெருக்களில் தலையில் தூக்கிக்கொண்டு விற்பனை செய்யக்கூடியதும் தெரு ஓரங்களில் வைத்துக்கொண்டு விற்பனை செய்யக்கூடியவர்களுடையவும் நிலைமையைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் ஒரு தெரு மூலையில் இருக்கும் ஆச்சியிடம்

[Sri V. V. Ramaswami] [16th February 1959

சென்று காலணுவுக்கு இட்லியோ, அல்லது தோசையோ வாங்கிக்கொண்டு வந்து சாப்பிடுவது வழக்கம். இப்படிப்பட்ட விற்பனையாளர்களுக்கு விதிகளையும் நிபந்தனைகளையும் போட்டுவிட்டால், அந்த ஆச்சி விற்க முடியாது. அந்தக் குழந்தைகளுடைய நிலைமை என்ன? அத்தகைய பண்டங்களை குழந்தைகளால் அதன் பிறகு வாங்க முடியுமா ? இப்படி விற்கக்கூடியவர்கள் பெரும்பாலும் பெண்களாகத்தான் இருப்பார்கள். இவர்கள் தலையில் தூக்கிக்கொண்டு போய் விற்றாலும், அது சுத்தமாக ஆகிவிடலாம். அநேக இடங்களில் அவைகளைத் தெரு மூலையிலும் ஓரங் களிலும் வைத்துக்கொண்டுதான் விற்பார்கள். (ஸ்ரீமதி மஞ்சுபாஷிணி : சாக்கடை ஓடுகின்ற இடங்களிலும் வைத்துக்கொண்டு விற்பார்கள்.) கனம் அம்மையார் அவர்கள் சொல்லுவது போல் அந்தப் பெண்மணிகள் உணவுப் பண்டங்களைச் சாக்கடை ஓரங்களில் வைத்துக்கொண்டுகூட விற்பது உண்டு. மற்றும் சாக்கடையை அள்ளிப்போட்டிருக்கக்கூடிய இடங்களைத் தள்ளிவிட்டுவிட்டுக்கூட அந்த இடத்தில் வைத்துக்கொண்டும் விற்பதுண்டு. அப்படி விற்கிறவர்களும் லைசென்சு வாங்க வேண்டுமா ? அந்த இடத்தை விட்டுவிட்டால், அவர்களுடைய வாடிக்கைக்காரர்கள் அங்கு வந்து பார்த்துவிட்டுப் போய்விடுவார்கள், அவர்கள் இல்லாவிட்டால். அதனால் அவர்களுடைய வியாபாரம் பாதிக்கப்படலாம். அநேக குழந்தை களுக்கு அப்படி வாங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடலாம். சமீபத்தில்கூட ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் ஒரு கடைப் பக்கத்தில் ஒரு வேப்பமரம் இருக்கிறது. அதனால் அந்தக் கடைக்கு வேப்பமரத்துக்கடை என்று ரொம்ப நாட்களாகப் பெயர் இருந்து வருகிறது. ஒரு நாள் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் அந்த மரத்தை வெட்ட முற்பட்டார்கள். அப்படி மரத்தை வெட்டிவிட்டால் தன் கடையின் பெயரும் மதிப்பும் போய்விடும் என்று சொல்லி நீதி மன்றத்தில் வாதாடி மரத்தை வெட்டக் கூடாது என்று தனக்குச் சாதக மாகத் தீர்ப்பு வாங்கிக்கொண்டார். என்னுடைய ஊரில் என் கடைக்குப் பக்கத்தில் ஒரு முஸ்லீம் பெண்மணி சுமார் 20 அல்லது 30 வருஷங் களாக ஒரு சில்லரைக் கடையை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து வந்தாள். அங்கு ஒரு நாள் ஒரு போலீஸ்காரர் வந்து அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்று சொன்னார். அதற்கு அந்தப் பெண்மணி, இங்கு நான் ரொம்ப நாட்களாகக் கடை வைத்து வியாபாரம் பண்ணிக் கொண்டிருக்கிறேன், அதனால் போக முடியாது என்று சொன்னதன் பேரில், 'இன்றைக்கு பெரிய அதிகாரி வருவதாகத் தெரிய வருகிறது, 'இன்றைக்கு ஒருநாள் மட்டும் எடுத்துவிடு, நாளை வைத்துக்கொள்ளலாம்' என்று அந்தப் போலீஸ்காரர் சமாதானமாகச் சொல்லிய பிறகு, அவள் வேறு இடத்திற்குப் போனாள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்தால், போலீஸ்காரர்கள் மாதக் கடைசியில் தங்களுக்குக் கேஸ்கள் வேண்டுமென்பதற்காக நூறு அல்லது இருநூறு கேஸ்கள் போடுவார்கள். அநேகம் பேர்கள் சாதத்தை மூலைகளில் கூடையில் வைத்தும் விற்கிறார்கள். அதிகப்படியாகப் பத்து அணா கொடுத்து வாங்கிச் சாப்பிட முடியாதவர்கள் இப்படிப்பட்டவர்களிடம் இரண்டு மூன்று அணாக்களைக் கொடுத்துவிட்டு வயிறாரச் சாப்பிட்டுப் போவதை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிச் சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டுப் போவதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, இப்படிச் சாப்பிடுகிறவர்களுக்கு இது பாதகமாக ஏற்படலாம். இந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு எதிர்ப்பும் சங்கடமும் வரப்போகிறது என்பது இப்பொழுது தெரியாது. இது எல்லோராலும் வரவேற்கக் கூடியதாக இல்லை. இப்படிப்பட்ட காரியங்களில் கட்டாயம் எதிர்ப்பு வரத் தான் செய்யும். திடீரென்று ஒரு நாள் ஹெல்த் ஆபீசர் எங்கள் ஊரில் வந்து கசாப்புக் கடை சாமான்களுக்குக் கண்ணாடி போடவேண்டு மென்று சொன்னார். இது சரியல்ல, கசாப்பு சாமான்களை நன்றாகக் கொதிக்க வைத்து பக்குவம் பண்ணித் தான் உட்கொள்கிறார்கள், ஆகவே, கண்ணாடி போட வேண்டுமென்ற நிபந்தனை போடக் கூடாது என்று சொல்லிவிட்டேன். ஆனால், கோவில் வாசலில் அநேக பலகாரக் கடைகள் இருக்கின்றன. எல்லாம் மூடி இல்லாமல் ஈ மொய்த்துக்கொண்டே இருக்கின்றன. வடை, ஜாங்கிரி போன்ற பொருள்களைக் கண்ணாடிப் பெட் டிக்குள் வைத்துக்கொள்ளும்படி செய்தோம். ஆனால், பெரிய பெரிய

16th February 1959] [Sri V. V. Ramaswami]

தட்டுகளில் காராசேவு, சீனிசேவு போன்ற பலகாரங்களை எப்படி மூடி வைப்பது ? ப்ளாஸ்டிக் மூடிகள் எங்கும் தாராளமாகக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். 4 p.m.

ஒரு தடவை திண்டிவனம் போகும்போது, ஒரு கடை வீதியில் வண்டி நின்றது. வலது பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஒரே கருப்பு மயமாக இருந்தது. அது என்ன என்று கேட்டதற்கு " கருப்பட்டி விற்கப்படுகிற கடைகள் " என்று பதில் வந்தது. கருப்பட்டி விற்கிற கடையா ? கருப்பட்டியைக் காணுமே என்று சொன்னேன். பூராவும் ஈ மொய்த்துக்கொண்டிருந்தது. கருப்பட்டி அடையாளம் தெரியவே இல்லை. ஈ மொய்த்துக்கொண்டிருந்த காரணத்தால் கருப்பட்டியாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் தீர்மானித்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே, இந்த மாதிரியான நிலைமைகளை மாற்றுவதற்குச் செயல்படும்போது, சங்கடமான நிலைமை ஏற்படத்தான் செய்யும். இதைக் கொஞ்சம் பிரசாரத்தின் மூலமாகவும் போக்க வேண்டும். வெறும் சட்டம் மட்டும் இயற்றுவதால்ஒன்றும் செய்துவிட முடியாது. இந்தச் சட்டம் மிகவும் அவசியம் தான். அதை அமுல் நடத்தும்போது நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டும். காலையில் குழந்தைகள் உணவு உட்கொள்ளச் சிறு கடைகள் இருக்கின்றன. கூலியாட்கள் உணவு உண்ண மத்தியானத்தில் கடைகள் இருக்கின்றன. வண்டியைத் தள்ளிக்கொண்டே போகிறவர்கள் தோசை சுட்டுக்கூட விற்கிறார்கள். தள்ளு வண்டிக்கு லைசென்சு எதற்கு என்று கேட்கிறார்கள். அந்த மாதிரித் தள்ளுவண்டிக்காரர்களை எவ்வாறு நிறுத்துவது ? ஆகவே, இந்தமாதிரி சந்தர்ப்பங்கள் வரும்போது, எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முடியும் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்துத்தான் செயல்படுத்த முடியும். அதைச் செயல்படுத்துகிற அதிகாரிகள் ரொம்பவும் எச்சரிக்கையாக இருந்து நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகமாக லைசென்ஸ் தீர்வை விதித்தால் யாரும் லைசென்ஸ் கட்ட முடியாது. அந்த நிலைமை ஏற்பட்டால் இவர்களெல்லாம் கடைகளை மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். இவர்களுக்குக் குறிப்பிட்டு, வாடிக்கையாக ஒரு இடம் கொடுத்து அந்த இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி கூற வேண்டும். அந்த இடத்தில் உள்ள சாக்கடையைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பை ஸ்தல ஸ்தாபனம் ஏற்று நல்லபடி செய்துகொண்டிருக்க வேண்டும். இவைகளையெல்லாம் செய்வதில் சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். 112-வது பிரிவைத் திருத்தும்போது " ஹெல்த் ஆபீசர்-சுகாதார அதிகாரி, இல்லாவிட்டால் அவரால் அதிகாரம் பெற்ற எந்த அதிகாரியாவது " என்று இருக்கிறது. முன்பே இருக்கிற சட்டத்தில் 112-வது பிரிவைப் பார்த்தால் " சுகாதார உத்தியோகஸ்தர் எந்த உணவுப் பொருளாகிலும், விற்பனைக்காகச் செய்யப்படும், தயாரிக்கப்படும், காட்டி வைத்திருக்கப்படும் அல்லது சேர்த்து வைத்திருக்கப்படும் யாதொரு இடத்தில் நோட்டீஸில்லாமல் பகலிலாவது இரவிலாவது எப்போதாயினும் பிரவேசித்து, அந்தப் பொருளையும் அதைச் செய்வதற்காகவாகிலும் தயாரிப்பதற்காகவாகிலும் வைத்திருப்பதற்காகவாகிலும் உபயோகிக்கப்படும் யாதொரு எனத்தையும் அல்லது பாத்திரத்தையும் பார்வையிடலாம் " என்று கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது நீங்கள் திருத்தம் கொண்டுவந்திருப்பதில் " சுகாதார உத்தியோகஸ்தர் அல்லது அவரால் கிரமமான அதிகாரம் பெற்ற ஒருவர் " என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே, இந்த மாதிரி வியாபாரம் செய்கின்றவர்கள் வீடுகளிலோ, கடைகளிலோ அப்பம், பூச்சி இடியாப்பம் ஆகியவைகளைச் செய்யும்போது அது இரவானாலும் பகலானாலும் போய்ச் சோதனை போட முடியும். இவ்வளவு பெரிய அதிகாரத்தைக் கொண்டுபோய் வேறு ஒரு நபருக்குக் கொடுத்தால் அது எதில் போய் முடியும் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இரவிலோ, பகலிலோ எந்த நேரத்திலும், எப்பொழுதாகிலும் எந்த இடத்திலும் சோதனை பண்ணலாம் என்று சொல்லுகிற அதிகாரத்தை கெஜெட் பதிவு அல்லாத " சானிடரி இன்ஸ்பெக்டர் " போன்ற சாதாரண அதிகாரிகளுக்குக் கொடுத்தால், தப்பான உபயோகத்திற்கு இடம் கொடுத்துவிடும் என்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படும்படியான சூழ்நிலை

கள் உண்டாகும். " இரவில் " என்பதை நீக்கிவிட்டு " பகலில் மட்டும் " என்று போட முடியுமா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்தப் பிரிவு முன்பே இருப்பது. ஆகவே, அதைத்தான் போட வேண்டும் என்று சொன்னாலும், முன்பு " ஹெல்த் ஆபீசர் " என்றுதான் இருக்கிறது. ஆனால் இப்பொழுது **"Health Officer or to a person duly authorized by him"** என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, ஹெல்த் ஆபீசருடைய பியூன் அல்லது டபேதார்கூட பழக்கம் உள்ளவனாக இருந்தால், சோதனை போடப் போகலாம் என்ற நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்தச் சட்டத்தில் உள்ள "இரவிலும்" என்பதை நன்றாக ஆலோசித்துப் பார்த்து நீக்கிவிட்டால் நல்லது என்று கருதுகிறேன். இந்தச் சட்டம் பொதுவாக வரவேற்கக்கூடிய சட்டமாகும். செயல் முறையில் வரும்போது, சில சங்கடங்கள் வரத்தான் செய்யும் ; சட்டத்தை ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். அதிகாரிகளும் அமுல் நடத்தும்போது நன்றாக ஆலோசித்துப் பார்த்து, பொது ஜன வெறுப்புக்கு இடம் கொடுத்துவிடாமல், அமுல் நடத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. M. ALLAPICHAI : Mr. Chairman, Sir, Sri G. Krishnamoorthy has attempted to make out a case for using leaves and other things. I do not have any quarrel with him. As a matter of fact, in a large number of houses, we use leaves. I mean the whole nation, almost the whole nation is using them.

SRI MOHAMED RAZA KHAN : The hon. Member does not use them.

* SRI A. M. ALLAPICHAI : That is a different thing. No one has any quarrel with that. We also have to realise, Sir, that we are living in this time when perhaps, almost every nation in the world is using plates and cups. It is not a question of infection and other things coming in in using plates and things like that. Suppose you use bad leaves—rotton leaves—with some contagion in the leaves; no doubt, you may get some disease. It is not a question of using either the leaf or the plate. If the plate is neatly washed, it is all right. I do not think there is anything bad in that. No doubt, if you feel that you must use leaves, by all means do use them. There is no point in objecting to it. But let us not give wrong reasons to satisfy ourselves. No doubt, what he said is correct in the sense that in the same bucket of water, they are going on washing any number of cups any number of times. his remark is correct. I have myself seen this, and I have felt disgusted at such time. I did not take coffee or tea that time I simply left the place. But we must try to remedy this state of affirs. Suppose one puts thousands of leaves in a bucket for washing. Even after washing, there will be contagion in some leaf. The contagion will spread from the leaf. The same will be the case with plates also. Our Brahmin friends chiefly use silver plates. (Sri T. P. Srinivasavaradan : Now eversilver Plates.) Generally they use silver plates in their houses. What harm is there in using plates, if they are nicely cleaned? What is wrong in using plates, if properly cleaned? No doubt, leaf is all right. You use it. No one is objecting to it. But why does the hon. Member say that plates are bad. Unless and until . . .

SRI G. KRISHNAMOORTHY : Brahmin friends are not taking food on silver plates in which food has been taken by others.

16th February 1959]

* SRI A. M. ALLAPICHAI : Then, Sir, my Friend's objection is that a man takes food on one plate in the hotels, in which many others had already taken food. Why not one take food on that plate, if it is properly cleaned? If Sri G. Krishnamoorthy has got sentimental objection, he need not go to the hotel. That is a different thing. Suppose, for example, Sri Balasubramanya Ayyar uses a cup. What harm is there if I use that cup after it is neatly washed? I do not think it is wrong. As a matter of fact, we Muslims are using plates, of course, nicely washed plates. We never suffer from any illness or ill health on that account. Though some may be using leaves, let them not advance wrong arguments. That 4-10 p.m. is what I say. Even in the case of leaves, if there is some dirt or contagious matter on it, people will surely get the infection. Therefore, what we should see is this. Whether we use leaves or plates, we must see that they are clean, free from dirt and do not contain infectious things. If we use nicely and cleanly washed plates, there is no harm and there is no danger. But, in some places, the plates are washed in buckets of water. I have myself seen some of these things. They are horrible and we cannot even look at them. The Corporation authorities and the Government authorities should devise ways and means to check such practices. They should take necessary action to inspect these big hotels and other places and see that such practices are put an end to. As pointed out by the hon. Member Sri Balasubramanya Ayyar, it is no use taking some samples of ' Vadais ' and stopping at that. The authorities must even go to the kitchens and see that things are kept clean. The most important thing is to see that the cleaning is done in a neat, scientific and healthy way. Once it is done, there is nothing wrong in using plates. I wish to point out another thing in this connection. All advanced countries and nations are using plates. There is nothing wrong in it. Let us not think too much of ourselves. We must also think of other people who are living healthy lives. Take, for instance, the Americans, the Englishmen, the Frenchmen and so many others. All of them are using plates.

SRI G. KRISHNAMOORTHY : Why not India show the way to the other countries in this respect?

* SRI A. M. ALLAPICHAI : That is all right. If the leaves are not properly and nicely washed, what will happen? You must think of that also. Unclean and improperly washed leaves also will be a source of contagion. Take the case of the Chinese who are the makers of plates. They are the inventors of plates, so to say. They are to-day a big race and a very important race too. They are very healthy. They are not eating on leaves. Whether it is a leaf or a plate, we must see that it is clean and not dirty. That is an important point which should be kept in mind.

DR. A. SREENIVASAN : Even if the leaf is contaminated and dirty, it will affect only one person who uses it as it will immediately

be thrown out after use. But, in the case of the plate, it will be used by so many and it will affect as many persons as use that contaminated plate.

* SRI A. M. ALLAPICHAI : All right. You are a doctor, you are a big expert. I cannot fight with you. So, I shall leave the matter there.

We have to consider another matter in this connection. It is no doubt not a very serious matter so far as this Bill is concerned. Anyway, I wish to refer to it. We say that everything should be kept clean and in a sanitary condition in hotels and restaurants. It is all right and we all agree to it. When we go to a hotel and order coffee, we get something. We pay two annas or three annas, as the case may be. I ask, " Is it real coffee "? We get some hot water mixed with sugar or some such thing. It is not all real coffee. We all know it. Is there any provision in this Bill to check such things so that we may get really good coffee for the money that we pay? With these few words, I conclude my speech, Sir.

* SRI M. ETHIRAJALU : மன்றத் தலைவர் அவர்களே, சென்ற சில மாதங்களுக்கு முன்பாகச் சில ஹோட்டல்களில் தயாரிக்கப்பட்ட உணவு விஷமாக மாறியதன் காரணமாகத்தான் இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் பொது மக்கள் சுகாதாரத்தின் அடிப்படையில் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக வெகு துரிதமாகக் கவனித்து இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்திருப்பதுபற்றி நான் மிக மிக நன்றியோடு அவரை வாழ்த்துகிறேன். மற்ற விஷயங்களிலும்—இம்மாதிரிப் பொது மக்களுக்கு ஏற்படும் தீங்குகளை நீக்க சுகாதார அமைச்சர் அவசரச் சட்டங்களைக் கொண்டுவருவாரேயானால், இன்னும் அவருக்கு நல்ல வாழ்த்து பொது மக்களிடத்திலிருந்து கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டம் ஒரு புறத்தில் நன்மை பயக்கக்கூடியதாகவும், மற்றொரு புறத்தில் ஏழை மக்களுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும் இருக்கிறது. நன்மை பயக்கக்கூடிய விஷயத்தில் இந்தச் சட்டம் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று பொது மக்கள் நன்றாக அவரை வாழ்த்துவார்கள். அதே நிலையில் சிறு சிறு ஹோட்டல்களையும் தேநீர்க் கடைகளையும், ரெஸ்டாரண்டுகளையும் வைத்து நடத்துகிறவர்கள்—கடன் வாங்கி நடத்துகிறவர்கள்—இந்தச் சட்டத்தில் விதிக்கப்படுகிற நிபந்தனைக்கு, கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்க முடியுமா என்று நாம் நினைக்கும்போது, அவர்களுக்கு நாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனது மதிப்பிற்குரிய நண்பர் மேன்மை தங்கிய திரு. வி. வி. இராமசாமி அவர்கள் அவற்றைப் பற்றியெல்லாம் மிகவும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். மூலை முடுக்குகளில், தெரு ஓரங்களில் தின்பண்டங்களை விற்கின்ற தாய்மார்களை இந்தச் சட்டம் பாதிக்கும் அளவிற்குக் கொண்டுபோய்விட்டால், அவர்களும் சர்க்காரைக் குறை கூறும் அளவுக்கு வந்துவிடக் கூடாது என்று சொன்னார்கள். இந்த மசோதாப்படி பார்த்தால், அவர்களுக்கு இந்தச் சட்டம் மிக்க கஷ்டத்தையும் உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது, இதை அமுல் நடத்துகிற உத்தியோகஸ்தர்களால் அப்படிப்பட்ட தாய்மார்களுக்கும் சிறு கடைக்காரர்களுக்கும் துன்பம் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக இதில் தக்க விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது ஓர் நிபந்தனை மட்டும் போடலாம். தெரு ஓரங்களில் விற்பவர்களுக்கு வேறு எவ்விதமான தடையும், லைசென்சும் இல்லாதவாறு செய்ய வேண்டும். அவர்கள் தயாரிக்கும்

16th February 1959] [Sri M. Ethirajalu]

தின்பண்டங்களைக் கண்ணாடி போட்டு மூடக்கூடிய பெட்டிகளில் வைத்துக் கொண்டு விற்றால் போதும் என்று செய்தால் போதும். அவர்களுக்கு வேறு எவ்வித லைசென்சும் வேண்டுமென்று போடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட சிறு கடைக்காரர்கள் தொழிற்சாலைக்குப் பக்கத்திலும் கடை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் தாங்கள் சிரமேற்கொண்டிருக்கிற வேலைகளைச் செய்துவிட்டு 'பசி, பசி,' என்று பறந்து வருகிற நேரத்தில் இது விஷம் கலந்திருக்கிற உணவா அல்லது சுகாதார அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிற உணவா என்று பார்க்க முடியாத அளவில் அந்தக் கடைக்குச் சென்று சாப்பிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஹோட்டல்களில் உணவினால் ஆபத்து விளையுமென்று சட்டத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்று அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்து, அதனால் ஹோட்டல் நடக்காது நிறுத்தப்பட்டால், நடுத்தர வகுப்பார்கள்—தொழிலாளர்கள்—தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்தக் கடைகளில் எல்லாம்—இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும்போது உடனடியாகக் குறிப்பிட்ட நடவடிக்கையை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் ஒரு முறை அல்லது இரண்டு முறை—சட்டத்தின் விதிகளை அவர்களுக்கு விளக்கி, "நீங்கள் இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கொஞ்சம் கொஞ்சமாகச் சுகாதார அடிப்படையில் நல்ல முறையில் சர்க்கார் திட்டங்களை அமுல் நடத்த நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்" என்பதை எடுத்துச் சொல்லி மூன்று முறை, நான்கு முறை எடுத்துச் சொன்னதற்குமேல் அப்படியும் நடக்காவிட்டால், பின்னர் சட்டப்படியுள்ள நிர்ப்பந்தங்களைச் செய்யலாமென சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிச் செய்யாமல், **human feeling** என்ற உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லாமல், அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்போமேயானால், அதனால் பெரும் அளவு நடுத்தர வகுப்பார்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இப்போது நகரங்களைப்பற்றித்தான் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். எங்கே பார்த்தாலும், ஹோட்டல்கள் இருக்கத்தான் செய்கின்றன. சென்னை நகரை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அல்லது மற்ற நகரங்களை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், ஹோட்டலுக்குப் போகாமல் ஒன்றும் நடைபெறவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். நகர ஹோட்டல்களில் உள்ளே செல்வதற்கு முன் வெளியே நின்று பார்த்தால், துர்நாற்றமுள்ள குழிகள், தேங்கியிருக்கும் தண்ணீர், கொசுக்கள் நன்றாகத் தெரியும். உள்ளே சென்று பார்த்தால் சமைக்கப்படுகிற இடமும் மலஜலம் கழிக்கும் இடமும் ஒன்றாக இருக்கிறது. வேலை செய்கின்றவர்கள் தூங்கும் இடமும் அதற்குப் பக்கத்தில் இருக்கிறது. இப்படி இருக்கிற நிலையைக் காண்கிறோம். அந்த இடங்களில் எல்லாம் இந்தச் சட்டத்தை நன்றாக அமுல் நடத்தவேண்டும். நகரங்கள் திருந்திவிட்டால் கிராமங்கள் தானாக முன்னேறிவிடும். அதுவும் பணக்காரர்கள் வைத்து நடத்தும் ஹோட்டல்களைச் சட்டப்படி நன்றாகக் கண்காணிக்க வேண்டும். கிராமங்களிலுள்ள ஹோட்டல்களிலும் அதாவது குறைந்த ஜனத்தொகையுள்ள இடங்களில் நடத்தும் ஹோட்டல்களிலும் தயாரிக்கப்படும் உணவில் விஷம் பரவும் என்று எனக்குத் தோன்றவில்லை. அதிகமான ஜனத்தொகையுள்ள இடங்களில் உள்ள ஹோட்டல்களில்தான், சுகாதார முறையைக் நன்றாக அனுசரிக்காத இடங்களில்தான், இவ்வாறு வியாதிகள் பரவும். ஏனென்றால் ஜன நெருக்கமுள்ள இடங்களில் இட வசதி போதவில்லை. எனவே, அதிக ஜனத்தொகையுள்ள இடங்களில் இருக்கும் ஹோட்டல்களுக்கு இப்படிப்பட்ட சட்டத்தைக் கடுமையாக்கினால், நன்றாக இருக்கும்.

4-20 p.m.

மேலும் இன்று சில பெரிய பெரிய ஹோட்டல்களில் மாமிசம் தயாரிக்கிறார்கள். அவைகள் எந்த நேரங்களில் மாமிசம் தயாரிக்க வேண்டும், எந்த நேரங்களில்தான் அதை விற்க வேண்டும் என்று அரசாங்கம் இன்னும் விளக்கம் தெரிவிக்கவில்லை. இவ்வாறு ஏன் சொல்கிறேன் என்றால்,

சென்னை நகரத்தில் சில பெரிய ஓட்டல்களில் இரவு 12 மணிக்குக் கூட மாமிசப் பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. வெளியிலிருந்து வருகிறவர்கள், நகரங்களில் இருப்பவர்கள், இரண்டு மணிக்குக்கூட மாமிசம் சாப்பிடுகிறார்கள். விற்கப்படாத மீதம் இருக்கும் மாமிசத்தை மறு நாள் காலையில் கூட விற்பனை செய்கிறார்கள். முதல் நாள் சமைத்த மாமிசத்தை இரவு வைத்திருந்து மறுநாள் சாப்பிடக் கூடாது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் பெரிய ஹோட்டல் முதலாளிகள் இந்த முறைப்படி ஹோட்டல்களை நடத்துவதில்லை. பொது மக்கள் என்ன கஷ்டப்பட்டாலும் சரி, தாங்கள் பணம் சம்பாதிப்பதே முக்கியம் என்ற ஒரே நோக்கத்துடன் இன்று பெரிய ஓட்டல் முதலாளிகள் ஓட்டல்களை நடத்துகிறார்கள் என்பதை நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாது. சுகாதார அதிகாரிகள் பெரிய ஓட்டல்களுக்குச் சென்று, அங்கே தின்பண்டங்கள் எப்போது செய்யப்பட்டன, அவைகள் விற்பனையாகின்றனவா, இல்லையா, அவை இரவு நேரங்களில் மீதம் வைத்திருந்து மறுநாள் பொது மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவா இல்லையா என்று கவனிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இது மிக மிக முக்கியம். சென்னை போன்ற நகரங்களில் நான் குறிப்பிட்ட தவறுகள் நடக்கின்றன. இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த ஹோட்டல்களின் பெயர்களைக் குறிப்பிட நான் விரும்பவில்லை. இந்தமாதிரியான விஷயங்களில் சுகாதார அதிகாரிகள் நாணயமான முறையிலும், நேர்மையான முறையிலும், நியாயமான முறையிலும் மக்கள் நலனே நம் நலம் என்று சிந்தித்துச் செயலாற்றினால், இந்த மசோதாவிற்குக்கூட அவசியமில்லை என்று கருதுகிறேன். அவர்கள் கடமையைச் செய்ய ஓட்டல்களுக்குச் சென்றவுடன் அவர்களை முதலாளிகள் உட்கார வைத்துப் போதிய அளவில் உபசரித்தால் ஹோட்டலில் எல்லாம் நன்றாக, சரியாக இருக்கிறது என்று அவர்கள் எழுதிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள்தான் இன்று சுகாதார இலாகாவில் இருக்கிறார்கள். இதை நான் குற்றம் கூற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இவைகளை நான் பார்த்திருப்பதால், இந்த சந்தர்ப்பத்தில் இங்கே நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகவே இனி அப்படிப் பொது மக்கள் குறை கூறாவண்ணம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ளவேண்டும். ஆகவே, இந்தச் சட்டத்தை அமல் நடத்தும்போது நடுத்தர மக்களுக்கு மிகவும் உபயோகப்படும் சிறு டீக்கடைகள், ரெஸ்ட்டாரண்டுகள் முதலியவைகளுக்குப் பாதகம் ஏற்படாத முறையில் சட்டத்தில் விலக்களிக்க வேண்டும். சிறிய ஓட்டல்களை நடத்துபவர்கள் தவறு செய்தால், அவர்களிடம் ஒரு முறைக்கு மூன்று முறை எடுத்துச்சொல்லி அவர்களைத் திருத்தி அதற்குப் பிறகு அவர்களைச் சட்டத்திற்கு உட்படுத்தக் கூடிய முறையில் சட்டத்தில் வழி செய்ய வேண்டும். முடியாவிட்டால், அமுல் நடத்தும் உத்தியோகஸ்தர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நம் பெரியார் ஸ்ரீ வி. வி. ராமசாமி அவர்கள் சொன்னதுபோல, நானும் கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. V. RAMASWAMI : பெரியார், பெரியார், என்று சொல்லி என்னை வேறு யாருடனாவது சேர்த்துவிடாதீர்கள்.

* **SRI M. ETHIRAJALU** : அவர் சொன்னதுபோல, தெருவில் மூலை முடுக்குகளில் தின்பண்டம் செய்து விற்கும் தாய்மார்களுக்கும் சிறு கடைக்காரர்களுக்கும் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **SRI M. V. SUDARSANAM NAIDU** : கனம் தலைவர் அவர்களே, இப்போது சுகாதாரம் சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஓட்டல்களை எவ்வாறு சுகாதார முறையில் நடத்த வேண்டும் என்பதுபற்றி அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நாம் சட்டமியற்றுவதற்கு முன், ஜனங்களின் அபிப்பிராயங்களையும் சட்டத்தால் ஏற்படக்கூடிய பலாபலன்களையும் அறிய வேண்டியது மிகவும் முக்கியம். சட்டத்தைக் கொண்டுவந்தால் மட்டும் பிரயோஜன

மில்லை. சட்டமியற்றுவதற்கு முன்பு மக்கள் என்னென்ன நினைக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறோம். ஓட்டல்களில் நடக்கும் இத்தகைய தவறுதல்களைத் தடுக்கும் முறையில் ஓட்டல்காரர்களுக்கு எந்தவிதமான இம்சையும் கொடுக்காமல் நாம் இப்போது இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது சாராயம், கள்ளுக்கடை முதலியவைகள் மறைந்துவிட்டன. அவைகள் இருந்த இடங்களில் இப்போது டீக்கடை களும் பலகாரக் கடைகளும் இருக்கின்றன. கள், சாராயக் கடைகளை ஒழிக்க வேண்டுமென்பதற்காக டீக்கடைகளை ஏற்படுத்தினோம். டீக்கடைகளுக்கும் சீர்கேடு வந்தால், முன்பு கள் குடித்து வந்தவர்கள் அரசாங்கத்தை இன்னும் ஜாஸ்தியாகத் தூற்ற ஆரம்பிப்பார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது. கடந்த காலத்தில் கள் அருந்திய எல்லோரும் இப்போது டீயையோ வேறு ஏதாவது பானத்தையோ இரண்டு வேளை சாப்பிட்டு ஓரளவு அமைதியாக இருக்கிறார்கள். அந்த டீக் கடைகளுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய சட்டம் வந்தால், அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தைத் தூற்ற ஆரம்பிப்பார்கள்.

மக்களின் நன்மைக்காகச் சுகாதாரச் சட்டத்தைக் கொண்டுவருகிறோம். ஆனால், அதைக் கொண்டுவரும் அதே நிமிஷத்தில் சில மனிதர்கள் இந்த ஊரிலும் மற்ற ஊர்களிலும் எச்சில் இலையை எடுத்து அதில் உள்ளதைச் சாப்பிடுகிறார்கள். இவ்வாறு செய்யும் மனிதர்களை மனிதர் களாகிய நாமே பார்க்கிறோம். இந்த அநியாய நிலை மாற வேண்டும் என்று மகாத்மா காந்திஜிகூட அடிக்கடி சொல்லியதுண்டு. அதற்கு அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. ஒருவனுடைய எச்சில் உணவை வேறொருவன் சாப்பிடும்போது, மனித வர்க்கத்தை மனித வர்க்கமே இழிவுபடுத்துகிறது. இதை நீக்குவதற்கு ஒரு சட்டமும் கொண்டுவரப்பட வில்லை. ஓட்டல்களில் நடக்கும் தவறுகளைப் போக்க இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கும் கனம் சுகாதார அமைச்சர் அதைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். மனித வர்க்கமே இழிவுபடுத்தப்படுவதைப் பார்க்கும் போது, ஒருவனுடைய எச்சில் உணவை மற்றொருவன் சாப்பிடுவதைப் பார்க்கும்போது, நமது மனம் பதைபதைக்கிறது. அது என் போன்ற வர்களுக்கு அவகேடாக இருக்கிறது. எனக்கு மட்டுமின்றி மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் அது அவகேடு. ரோடு ஓரங்களிலும் தெருக்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் மிளகாயை அறைத்துச் சமையல் செய்கிறார்கள். மழையோ தூறலோ வரும் போது அவர்கள் அதை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். அவ்வாறு ஓடும் போது அவை கீழே விழுந்தால், அவைகளைத் திரும்ப எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறார்கள். இது சம்பந்தமாக என்ன சுகாதாரச் சட்டம் இயற்றியிருக்கிறோம்? ஒன்றுமில்லை. இந்தமாதிரியான அவல நிலை நாட்டில் இருக்கிறது. இவைகளைப்பற்றிச் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும். சட்டத்தைக் கொண்டுவந்தால் மாத்திரம் போதாது. சட்டத்தைக் கொண்டு வந்தால், அதிகாரிகளின் கொடுமை ஏற்படும். அதிகாரிகளின் கொடுமை ஏற்பட்டால், அரசாங்கத்தை மக்கள் தூற்றுவார்கள். சின்னப் பிள்ளைகளாக இருப்பவர்கள் அதிகாரிகளாக வந்துவிடுகிறார்கள். இளம் அதிகாரிகள் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டார்கள். பெரியவர் களாக இருக்கும் அதிகாரிகளாவது தயவு தாட்சண்யம் பார்ப்பார்கள். இளம் அதிகாரிகள் கண்டிப்பாக இருப்பார்கள். இந்த மசோதாவைச் சட்டமாக்குவதற்கு முன்பு கிராமங்களில் அங்காடிக் கடை போட்டு வியாபாரம் செய்யும் ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படாமலிருப்பதற்கு, ஏற்பாடு செய்ய வேண்டும். எச்சரிக்கை செய்து அவர்களைத் திருத்த வேண்டும். சட்டத்தில் அவர்களுக்கு உரிய சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI A. GAJAPATHY NAYAGAR** : மன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றிப் பேசவேண்டியதையெல்லாம் பேசிவிட்டார்கள். நான் சுருக்கமாகச் சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். நான் சிதம்பரத்தில் முன்சீபாக இருந்தபொழுது, ஒரு பெரிய ஹோட்டலில் இட்லி விற்றார்கள். ஒரு பெரிய கொப்பரை நிறைய இட்லி மாவு இருந்தது. அந்தக் கொப்பரைக்கு அடியில் ஒரு கருந் தேள் 4-30 p.m.

[Sri A. Gajapathy Nayagar] [16th February 1959

செத்துப்போய்க் கிடந்தது. இப்படியும் சில சமயங்களில் நடப்பது உண்டு. இதைப்பற்றி யாரையும் குறை கூற முடியாது. ஆனால், நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், பெரிய ஹோட்டல்களில் கவனம் செலுத்தி அவைகளைச் சீர்திருத்த வேண்டும். வறுமையினால், அதிகப் பசியினால் டீக்கடை வைத்து வாழும் ஏழை மக்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. பெரிய ஹோட்டல்களில் சுகாதார நிலைமை இருக்கின்றதா என்பதை நாம் முதலில் கவனிக்க வேண்டும். இந்தக் காலத்தில் ஹோட்டலுக்குப் போகாதவர்கள் யாருமில்லை என்று சொல்லலாம். அவர்களுக்கு வீட்டிற்குப் போய் வருவதற்கு நேரம் இருக்காது. அவர்களுக்குப் பல அலுவல்கள் இருக்கும். இந்த ஹோட்டல்களிலே சமையல் செய்யும் இடம் எப்படி இருக்கிறது என்பதை முதலில் கவனிக்க வேண்டும். நான் ஒரு பெரிய மிலிடரி ஹோட்டலுக்குப் போயிருந்தேன். எனது நண்பர் ஒருவர் டீ குடிப்பதற்காக என்னை அழைத்தார். அவர் கூடப் போயிருந்தேன். (குறுக்கீடு). துலுக்கன் ஹோட்டலுக்குப் போகக் கூடாது என்பதில்லை. யார் வைத்திருக்கும் ஹோட்டலாக இருந்தாலும் போகலாம். என் நண்பருடன் டீ சாப்பிடுவதற்குப் போயிருந்தேன். அது மவுண்டு ரோடில் பெரிய ஹோட்டல். ஒரு பக்கெட்டுக்கு ஒரு சாண் மேலே கொழுப்பு மிதந்துகொண்டிருந்தது. அதில் பிளேட்டுகளைப் போட்டுக் கழுவிக்கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒரு புளிச்ச நாற்றம். சமையல் செய்கிற இடத்திற்குப் பக்கத்திலே கக்கூஸ். இம்மாதிரியாக அங்கு இருக்கும் சுகாதாரத்தைப்பற்றிச் சொல்ல முடியாது. முதலாவதாக பெரிய ஹோட்டல்களில் இந்தச் சட்டத்தை நல்லபடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அதைச் செய்துவிட்டால் நன்றாக இருக்கும். சிறு சிறு கடைக்காரர்கள், சிறு கடை வைத்திருக்கும் பெண்கள்கூட லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. அவர்கள் என்ன பண்டங்கள் செய்கிறார்களா ? இல்லை, டீ தான் விற்கிறார்கள். டீயோடுகூட, ரொட்டி, பிஸ்கட் மட்டும்தான் விற்கிறார்கள். காலையில் " வாக் " போகிறவர்களுக்கு இரண்டு பிஸ்கட்டும் டீயும் விற்கிறார்கள். அவர்களுக்கு எதற்கு லைசென்ஸ் ? டீ, காப்பி விற்கும் யாருக்கும் லைசென்ஸ் தேவையில்லை. பண்டங்களை வேறு இடத்தில் செய்து கொண்டுவந்து விற்பவர்களுக்கு லைசென்ஸ் தேவையில்லை. ஏழை மக்கள் பிழைப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பிழைப்பைக் கெடுக்கக் கூடாது. திரு வி. வி. ராமசாமி அவர்கள் சொன்னமாதிரி, சில பெண்கள் ஆப்பம், இடியாப்பம் போன்ற பண்டங்கள் விற்றுப் பிழைக்கிறார்கள். அவர்களை வேண்டுமானால் குப்பையான இடத்தில் வைத்து விற்கக்கூடாது, நல்ல சுத்தமான இடத்தில் வைத்து விற்க வேண்டுமென்று சொல்லலாம். அந்தப் பண்டங்களை ஒரு வலையையோ அல்லது வேறு பேப்பரையோ போட்டு மூடிவைக்க வேண்டுமென்று சொல்லலாம். அவர்களைப் போய் லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று தொந்தரவு செய்யக் கூடாது. தின்பண்டங்கள் செய்யும் இடம், தின்பண்டங்கள் செய்யாமல் விற்கும் இடம், தனி நபர்கள் வைத்துக்கொண்டு விற்பனை செய்யும் இடம், அதிக மக்களைக் கொண்டு தின்பண்டங்கள் செய்யுமிடம் இவைகளையெல்லாம் பரிசீலித்து, இடத்திற்கும், காலத்திற்கும், பொருளுக்கும் ஏற்ப அறிவைச் செலுத்தி இந்தச் சட்டத்தை அமுல் நடத்தினால் நன்றாக இருக்கும்.

இன்னொன்று சொல்லுவேன். இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது முதற்கொண்டு லஞ்சம் தாண்டவமாடுகிறது. இதை நான் பப்ளிக்காகச் சொல்லுவேன். சுகாதார அதிகாரிகளை உள்ளே வர விடுவதில்லை. இம்மாதிரி லஞ்சம் தாண்டவமாடுவதினால்தான் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அதிகாரிகளை உள்ளே போக விடமாட்டார்கள். ஜோப்பியில் 5 ரூபாய் போட்டுவிட்டால் " ஆல் ரைட் " என்று சொல்லிவிடுவார்கள். அது யார் பேரில் தப்பு ? ஹோட்டல் வைத்திருப்பவர்கள் மீதுதான் தப்பு. அவர்கள்தான் இம்மாதிரி அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கிறார்கள். ஆகையினால், பெரிய ஹோட்டல்களைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். நண்பர் அவர்கள் சொன்னதுபோல, மதுபானத்தை விட்டுவிட்ட பிறகு, இப்பொழுது டீக்கடைகள் அதிகரித்திருக்கின்றன. அந்தச் சிறு சிறு

16th February 1959] [Sri A. Gajapathy Nayagar]

டீக் கடைகளில்தான் பிஸ்கட்டும், ரொட்டியும் கூடவே வியாபாரம் செய்து மக்கள் பிழைக்கிறார்கள். ஆகவே, தின்பண்டங்கள் செய்யும் இடத்திற்குத் தான் கண்டிப்பாக லைசென்ஸ் வாங்க வேண்டும். தின்பண்டங்கள் செய்யாமல் விற்பனை மட்டும் செய்யும் இடத்திற்கு லைசென்ஸ் வாங்க வேண்டாம். தனிப்பட்ட எழை மக்கள் இம்மாதிரி டீ அல்லது பண்டங்களை விற்றால், அவர்களை லைசென்ஸ் வாங்கச் சொல்லக் கூடாது என்று வேண்டிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

